| Scale | F | Tempo | 120 | Style | Pop Rock> Country 2-4 |
|---|---|---|---|---|---|

35. கல்வாரி நாதா ஸ்தோத்தரிக்கிறோம்

கல்வாரி நாதா ஸ்தோத்தரிக்கிறோம்
கவலைகள் தீர்ப்பவரே ஸ்தோத்தரிக்கிறோம்
கண்ணீரைத் துடைப்பவர் ஸ்தோத்தரிக்கிறோம்
கஷ்டங்கள் போக்குபவர் ஸ்தோத்தரிக்கிறோம்

1

கர்த்தாதி கர்த்தாவே ஸ்தோத்தரிக்கிறோம்
காயங்கள் கட்டுபவர் ஸ்தோத்தரிக்கிறோம்
காண்கின்ற தேவா ஸ்தோத்தரிக்கிறோம்
காக்கின்ற தேவா ஸ்தோத்தரிக்கிறோம்

2

கிருபையின் நாதா ஸ்தோத்தரிக்கிறோம்
குணமாக்குபவரே ஸ்தோத்தரிக்கிறோம்
குறைகளை நீக்குபவர் ஸ்தோத்தரிக்கிறோம்
கேடயமானவர் ஸ்தோத்தரிக்கிறோம்

3

சர்வ சிருஷ்டிகரே ஸ்தோத்தரிக்கிறோம்
சத்தியமானவரே ஸ்தோத்தரிக்கிறோம்
சகலம் படைத்தவர் ஸ்தோத்தரிக்கிறோம்
சமாதானப் பிரபு ஸ்தோத்தரிக்கிறோம்

4

சர்வ வல்லவரே ஸ்தோத்தரிக்கிறோம்
சகாயரே உம்மை ஸ்தோத்தரிக்கிறோம்
சாரோனின் ரோஜாவே ஸ்தோத்தரிக்கிறோம்
சாலோமின் ராஜாவே ஸ்தோத்தரிக்கிறோம்